அருங்காட்சியகத் துறை

காலாண்டுச் செய்திமலர்

(அக்டோபர் - டிசம்பர், 1996.)

வெங்கலச் சிற்பம் - டி. பி. ராய் சௌத்ரி (1899-1975)

வெளியிடுபவர்

கண். தீனதயாளன், இ.ஆ.ப.,

அருங்காட்சியகங்களின் ஆணையர்,

அரசு அருங்காட்சியகம், சென்னை-8.

31, மார்ச், 1997

ஆணையரின் நேருக்கு நேர்.....

அருங்காட்சியகத்துறை தமிழ்நாடு அரசின் பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களால் (ரூ. 22.4 இலட்சம்) அரும்பொருட்களைச் சேகரிக்கவும், பாதுகாக்கவும் பார்வையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு முறைகளில் நூற்றுக்கணக்கான அரும்பொருட்கள் சேகரிக்கப் பட்டு, கண்காட்சிகளில் அமைக்கப்பட்டன. தற்போது முடிவுற்ற 1996-97 நிதியாண்டில், மாணவர்களுக்காக ஓவியப் போட்டிகள், விழாக்கள் நடத்தப்பட்டன; பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு மாணவர்களும் மற்றவரும் பயனடைந்தனர். ஆய்வாளர்கள் பலர் அருங்காட்சியகங்களில் ஆய்வுப் பணிக்கான உதவி பெற்றுள்ளனர். பல்வேறு ஆய்வுத் திட்டங்களை அருங்காட்சியகங்கள் நடத்திவருகின்றன. இத்துறையே கருத்தரங்கு நடத்தியது மட்டுமின்றி காப்பாட்சியர்கள் மாவட்ட, மாநில, தேசிய அளவிலும் உலகளவிலும் நடத்தப்பட்ட கருத்தரங்குகள், மாநாடுகளில் கலந்து கட்டுரைகள் படித்துள்ளனர். பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளும் செய்திகளும் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன. இக்காலாண்டில் ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அருங்காட்சியகக் காட்சிக்கூடங்களில் சீரமைப்புப் பணிகள் பல செய்யப்பட்டுள்ளன.

1996-97 நிதியாண்டில் கல்விப் பணிக்காக அகலத்திரை சென்னை அருங்காட்சியத்திற்குப் பெறப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியக வளாகத்திலுள்ள கட்டங்களிலுள்ள அலுவலர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளவும் வெளிச் செய்திகளைப் பெறவும் உட்தொலைபேசி (Intercom) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மாவட்ட அருங்காட்சியகங்களின் முக்கியத்துவம் உணர்ந்து, மதுரை மற்றும் சேலம் மாவட்ட அருங்காட்சியகங்களில் ரூ. 3 இலட்சம் செலவில் இரண்டு டைனோசர் வைக்கப்பட்டு உள்ளன. விரைவில் தெய்வத்திருத்தலம் பழநியில் 14-வது அருங்காட்சியகம் அமைக்கப்போகிறோம் என்பதும் மற்றுமோர் மகிழ்ச்சியான செய்தி. வளர்ந்து வரும் நிலையில் இத்துறையின் பணி அனைவரும் அறிய வேண்டி காலண்டுச் செய்திமலர் வெளியிடப் படுகிறது. இவ்வரிசையில் இது இரண்டாவதாகும். இச்செய்தி மலர் கால தாமதமாக வெளியிடுவதைக் குறித்து வருந்துகிறோம். தங்கள் கருத்துக்களையும், கட்டுரைகளையும் வரவேற்கிறேன். இச்செய்தி மடல் வெளிவர உதவிய அனைத்து காப்பாட்சியர்களுக்கும் அலுவலர்களுக்கும் குறிப்பாக இதனைத் தொகுத்தளித்த துணை இயக்குநர் முனைவர் நே. தேவசகாயம், வேதியியப் பாதுகாப்புப் பகுதி காப்பாட்சியர் முனைவர் வே. ஜெயராஜ் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1997-98ஆம் ஆண்டின் புதிய திட்டங்களின் விபரத்துடன் அடுத்த செய்திமலரில் சந்திக்கலாம். வாழ்த்துக்கள்.

சென்னை-8,
31.3.1997.

(கண். தீனதயாளன்)

அருங்காட்சியகத்துறை

காலாண்டுச் செய்தி மலர்

(அக்டோபர் - டிசம்பர், 1996)

சிறப்பு நிகழ்ச்சிகள்

சென்னையில்

டிசம்பர் 31-ஆம் நாள் சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் இரண்டாம் பகுதி திட்டங்களின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட உட்தொலைபேசி, அகலத்திரை ஆகியவற்றின் அர்ப்பணிப்பு விழா, தொழிற்கலைக்கூடம் திறப்பு விழா, சிறுவர் ஓவியப்போட்டி பரிசளிப்பு விழா, ஓவியக்கண்காட்சி கலைக்கருத்தரங்க தொடக்க விழா ஆகிய நிகழ்ச்சிகள் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலர் திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்க, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர், முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வளர்கலைக்கூடக் கையேடு, பேராசிரியர் டி. பாலகிருஷ்ணன் நாயர் நினைவுச் சொற்பொழிவு வெளியீடு, இந்து உருவங்கள், சித்த மருத்துவச் சிறப்புச் சொற்பொழிவுகள், காலாண்டுச் செய்தி மலர் ஆகிய அருங்காட்சியக வெளியீடுகளை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

இலவச சித்த மருத்துவ முகாமினை இவ்வருங்காட்சியக தாவரவியல் பிரிவும், அரசு சித்த மருத்துவக்கல்லூரியின் நாட்டுப் பணித்திட்டப் பிரிவும் இணைந்து நடத்தின. 13.11.1997 அன்று சிறுவர் அருங்காட்சியகத்தில் "போக்குவரத்தின் வளர்ச்சி" என்ற புதிய காட்சிக் கூடத்தை, அருங்காட்சியகங்களின் ஆணையர், திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., தொடங்கி வைத்தார். ஸ்டெல்லா மேரிக் கல்லூரி இளங்கலை வரலாற்றுத்துறை மாணவியர் சமூக விழிப்புணர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருட்களைத் தூய்மை செய்தல், விளக்கிக் கூறும் பணி, பார்வையாளர்களின் எண்ணங்களை அறிதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

குழந்தைகள் நாள் தொடர்பான பரிசளிப்பு விழா 15.12.96 அன்று நடத்தப்பட்டது.

வேலூர்

19.11.96 முதல் 22.11.96 வரை 'உலக மரபு வார விழா' கொண்டாடப்பட்டது. மாணவ மாணவியர் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர்.

உதகை

14.10.1996 முதல் 18.10.96 வரை உதகை அரசினர் மேனிலைப்பள்ளியில், சி.பி.ஆர். சுற்றுச் சூழல் கல்வி நடுவத்துடன் இணைந்து 'கானுயிர் வாரம் - 1996' நடத்தப்பட்டது. இதுதொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கோவை

21.11.96 முதல் 24.11.96 வரை இவ்வருங்காட்சியகம் கோவை தொல்பொருள் ஆய்வுத் துறையுடன் இணைந்து 'உலக மரபு வார விழா' கொண்டாடியது. இதில் வரலாற்றுச் சிறப்பு மிக்கக் கோயில்கள் பற்றி கோவை மாவட்ட பள்ளி மாணவர்களுக்கு அறிஞர் பெருமக்களால் விளக்கிக் கூறப்பட்டது.

கடலூர்

சுதந்திர இந்தியாவை வளப்படுத்த தற்போது தேவையானது பண்பாட்டுக்கல்வியா? பொருளாதாரக் கல்வியா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தப்பட்டது.

கன்னியாகுமரி

16.11.96 முதல் 23.11.96 வரை தேசிய ஒருமைப்பாட்டு வார விழா கொண்டாடப்பட்டது. 23.11.96 அன்று தமிழ் வளர்ச்சித் துறையும், அருங்காட்சியகமும் இணைத்து "பண்பாட்டு ஒற்றுமை நாள் விழா" நடத்தப்பட்டது.



மாண்புமிகு அமைச்சர், முனைவர் மு. தமிழ்க்குடிமகன் சிறுவர் ஓவியக்கண்காட்சி மற்றும் வளர்கலைக் கண்காட்சியைத் தொடங்கி வைக்கிறார். தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச்செயலர், திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., மற்றும் அருங்காட்சியகங்களின் ஆணையர், திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., உடன் இருக்கின்றனர்.



சென்னை அரசு அருங்காட்சியகம் நடத்திய சிறுவர் ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற சிறுமிக்கு மாண்புமிகு அமைச்சர், முனைவர் மு. தமிழ்க்குடிமகன் பரிசளிக்கிறார்

திருநெல்வேலி

19.12.96 அன்று புதிய இசைக்கருவிகள் காட்சிக் கூடமும் கல்வெட்டுக்கூடமும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. துறை அமைச்சர் அவர்களும், துறைச் செயலர் திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்களும், நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., அவர்களும் நெல்லை அருங்காட்சியகத்திற்கென முன்னாள் பாளை வட்டாட்சியர் அலுவலகத்தைத் தேர்வு செய்தனர்.

புதிய சேர்க்கைகள்

சென்னையில்

தஞ்சாவூர் மாவட்டம், திருமதுகல் கிராமத்திலிருந்து சனிவாசர், சிரீதேவி, பூதேவி, சனிவாசர் பிரபையுடன், விஷ்ணு, சுதர்சன மணி, சக்கரம் (உடைந்தது) ஆகிய ஏழு படிமங்கள் புதைப்பொருள்களாகப் (தொல்பொருள் பிரிவு) பெறப்பட்டன.

நாகை காயிதே மில்லத் மாவட்டம், மேமாத்தூர் கிராமத்திலிருந்து புதையல் நகைகள் பெறப்பட்டுள்ளன (மானிடவியல் பிரிவு). அண்ணாசாலை தலைமைத் தபால் அலுவலரிடமிருந்து 10 சிறப்புத் தபால் தலைகள், உறைகள், செய்திமடல்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டன (நாணவியல் பிரிவு). அரசு சித்த மருத்துவக் கல்லூரியிலிருந்து 20 உலர்த்தாவரங்களும், சென்னை கிறித்தவக் கல்லூரியிலிருந்து 33 உலர்த் தாவரங்களும் பெறப்பட்டு சேர்க்கையில் சேர்க்கப்பட்டன (தாவரவியல் பிரிவு). தமிழ்நாடு கனிம நிறுவனத்திடமிருந்து 6 பலவண்ணக் கருங்கற்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளன (புவியியல் பிரிவு). திருச்சி, தென்னக இரயில்வே மண்டலப் பயிற்சிப் பள்ளியிலிருந்து வழித்தடை விளக்கு சம்மந்தப்பட்ட தியோபால்டு சாவி வகை ஒரு வழித்தடைக் கருவி ஒரு ஜோடும், மேஜை வகைத் தொலைபேசி கருவிகள் இரண்டும், சைக்ஸ் இருவழி தடைக்கருவி ஒன்றும், பெங்களூர் இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனத்திடமிருந்து 'கிரான்' விமான மாதிரி ஒன்றும் சிறுவர் அருங்காட்சியகத்திற்குப் பெறப்பட்டு சேர்க்கையில் சேர்க்கப்பட்டன.

புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்திலிருந்து 120 பிளாஸ்டர் மாதிரி

சிற்பங்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டுபுதுக்கோட்டை, சேலம் மற்றும் கன்னியாகுமரி மாவடட அருங்காட்சியகங்களுக்கு வழங்கப்பட்டன (வேதியியப் பாதுகாப்பு மற்றும் வடிவமைப்புப் பிரிவுகள்).

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

புதைபொருட்களாக ஐந்து படிமங்களும், ஒரு நல்ல பாம்பு, ஒரு கழுகு, இருபது வண்ணத்துப்பூச்சிகள் ஆகியவை பிடிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, சேர்க்கையில் சேர்க்கப்பட்டன.

மதுரை

அருங்காட்சியக வளாகத்தில் பிடிக்கப்பட்ட நில ஆமை ஒன்று, 50 வண்ணத்துப்பூச்சிகள், ஒனாய்பாம்பு ஒன்று, பொன் வண்டு ஒன்று ஆகியவை பதப்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், காட்டூர் கிராமத்திலிருந்து 6 அடி உயரமுள்ள லிங்கச் சிற்பம், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த திரு. எஸ். சீனிவாசனிடமிருந்து அன்பளிப்பாக, பவளக்கொத்து ஒன்று, அஞ்சல் துறையிடமிருந்து 7 சிறப்பு அஞ்சல் தலைத் தொகுப்புகள் ஆகியவை பெறப்பட்டு சேர்க்கையில் சேர்க்கப்பட்டன.

வேலூர்

தலையற்ற மாக்கல் கணேசர் சிலை, அஞ்சல் துறையிடமிருந்து இந்திய முதல் நாள் அஞ்சல் உறைகள் எட்டு, வேலூரைச் சார்ந்த திரு. அருள் அன்பளிப்பாகக் கொடுத்த, அவரால் உருவாக்கப்பட்ட ஆறு கலைப் பொருட்கள் அருங்காட்சியகச் சேகரிப்பில் சேர்க்கப்பட்டன.

ஈரோடு

பெரியார் மாவட்டம், பவானி வட்டத்தைச் சேர்ந்த திரு. மோகன் ராஜ் மிருந்து 58 செ.மீ உயரமும் 44 செ.மீ அகலமும் உடைய அலுமினியத்தாலான விநாயகர் சிலை ஒன்று, 38 செ.மீ. உயரமும் 29 செ.மீ. அகலமும் உடைய பாரத்தாலான நவக்கிரகச் சிற்பம் ஒன்று விலைக்கும், அதே மாவட்டத்திலுள்ள பிக்கையர் பேர்ந்தகிரு பத்திரகிரி மிருந்து 18 செ.மீ



மாண்புமிகு அமைச்சர், முனைவர் மு. தமிழ்க்குடிமகன் வளர்கலைக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார்.



விஷ்ணு தேவியருடன் (வெங்கலம்)
கி. பி. 14-ஆம் நூற்றாண்டு
(சென்னை அருங்காட்சியகப் புதிய சேகரிப்பு)

நீளமும் 20 செ.மீ அகலமும் 8 செ.மீ உயரமும் கொண்ட யானைப்பல் ஒன்று அன்பளிப்பாகவும் பெறப்பட்டு சேர்க்கையில் சேர்க்கப்பட்டன.

உதகை

புதுவகைக் குறிஞ்சி, பெரணி ஆகியவை சேகரிக்கப்பட்டன.

கோவை

கோவை மாவட்டம், போளுவாம்பட்டி திரு. ஐ. இராமசாமி அவர்களிடமிருந்து மூலிகை மருத்துவச்சுவடி (203 ஓலைகளும்), திரு. எஸ். ஏஸ். மணியன் என்பவரிடமிருந்து பெண்கள் கும்மியடித்து, நாட்டுப்புறப் பாடல்கள் பாடுவது போன்ற ஒலியம் ஒன்று, திரு. ஏ.ஆர்.கே. அருண் அவர்களிடமிருந்து நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த வண்ணத்துப் பூச்சிகள் பல வண்ணங்களில் பொறிக்கப்பட்ட அஞ்சல் தலைகள், திரு. ஆர். சந்திரசேகரன், கோயம்பத்தூர் அவர்களிடமிருந்து ஓர் ஆணும் பெண்ணும் நீர் எடுக்கச் செல்லும் காட்சியைத் துணியில் தீட்டப்பட்ட எண்ணெய் வண்ண ஓவியம், கோவை மாவட்டம் வெள்ளலூரிலிருந்து 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வண்ணப்பூச்சுகளுடைய மண்பானைகள் ஆகியவைகள் பெறப்பட்டு சேர்க்கையில் சேர்க்கப்பட்டன.

கடலூர்

பண்ருட்டி வட்டத்திலிருந்து பூசைக்குப் பயன்படுத்தப்பட்ட உலோகப் பொருட்களும், பித்தளைத் தட்டுக்கள், தட்டின் உடைந்த பாகங்கள் ஆகியவை புதைபொருட்களாகப் பெறப்பட்டு சேர்க்கையில் சேர்க்கப்பட்டன.

கன்னியாகுமரி

"நல்லபாம்பு" ஒன்று பதப்படுத்தப்பட்டு காட்சியில் வைக்கப்பட்டது. அருங்காட்சியக நூலகத்திற்கென முனைவர் ந. சுப்புரெட்டியார் எழுதிய தொண்டை நாட்டுத் திருப்பதிகள், சோழ நாட்டுத் திருப்பதிகள், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், முற்கால பல்லவ வம்சம் என்ற நூல்கள் வாங்கப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன.

திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் உவரி, தேரி, சாயர்புரம், தாமிரபரணி ஆற்றோரப் பகுதிகள், சிவகாசிக்கு அருகில் உள்ள விசுவநத்தம், ஆனைக்குப்பம் போன்ற பகுதிகளிலிருந்து 24 நுண்ணிய கற்காலக் கருவிகள்,

15 இரும்புகாலப் பானைகளின் பாகங்கள், படிகக்கற்கள், வழவழப்பான எடையற்ற கல்வகைகள், வானாதிராயர்கள் வெளியிட்ட சமர கோலாகலன் காசுகள் (செம்பு). இராசராசன் வெளியிட்ட காசுகள், மதுரை சுல்தானின் 'கலிமா' காசுகள், ஆங்கிலேயர் கால செப்புக் காசுகள், நாயக்கர் மற்றும் சேதுபதி காசுகள், பொத்தான்கள், 5.5 அடி உயரமுள்ள கிராமிய சுடுமண் குதிரை மற்றும் 'அகேசியா' எனப்படும் தாவர வகைப் பொருட்கள் அருங்காட்சியகச் சேகரிப்பில் சேர்க்கப்பட்டன.

கிருட்டிணகிரி

திரு இ.ஜீ. நடராசன் - காவேரிப்பட்டிணம், அவர்களிடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட கற்சிற்பம் (கிராம தெய்வம்) ஒன்று, அதே ஊரைச் சேர்ந்த திரு. என். ஆர். ஜெயச்சந்திரன், துணைப்பதிவாளர் (ஓய்வு) அவர்களிடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட ரஷ்ய நாட்டு நாணயங்கள் 5, திரு ஆனந்த் - கிருட்டிணகிரி அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆறாம் ஜார்ஜ் இரண்டு அணா ஒன்று, திரு. ஜீவா பொன்னகரம் (விடுதலைப் போராட்ட வீரர்) அவர்கள் மூலம் திரு. தீர்த்தகிரி முதலியார் அவர்களின் ஒளிப்படம் ஒன்று ஆகியவை பெறப்பட்டு சேர்க்கையில் சேர்க்கப்பட்டன.

வேதியியப் பாதுகாப்புப் பணிகள்

15 படிமங்கள், 3 ஓலைச்சுவடிக் கட்டுகள், ஒரு வெள்ளி விளக்கு, ஒரு தந்தத்தாலான சதுரங்கப்பலகை மற்றும் அதைச்சார்ந்த உருவங்கள், 850 செப்பு நாணயங்கள், 7 சய நாணயங்கள், நான்கு ஓவியங்கள், இரு அரக்கு ஓவியங்கள் தகுந்தமுறையில் பேணப்பட்டன. ஸ்டெல்லா மேரிக்கல்லூரி மாணவிகளின் உதவியுடன் 100 கற்சிற்பங்கள் காட்சிக்கூடங்களில் தூய்மை செய்யப்பட்டன. வேலூர் கலைக்கூடத்திலிருந்து பெறப்பட்ட ஒரு ஓவியம் தகுந்தமுறையில் பாதுகாக்கப்பட்டு திருப்பிக் கொடுக்கப்பட்டது. 17 அடி நீளம் லேமினேசன் பணி செய்யப்பட்டது.

583 பறவைகள் விலங்கியல் பிரிவால் தூய்மைபடுத்தப்பட்டு வேதியியப் பாதுகாப்பளிக்கப்பட்டன.



மகாவீரர், (கருங்கல்)
கி. பி. 8-ஆம் நூற்றாண்டு,
ஆழ்வார் திருநகரி, வ. உ. சிதம்பரனார் மாவட்டம்
(திருநெல்வேலி அருங்காட்சியகப் புதிய சேகரிப்பு)



அம்மன் விளக்குகளும் எண்ணெய்ப் பாத்திரமும் (வெங்கலம்)
சுமார் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு
பண்ருட்டி, வள்ளலார் மாவட்டம்
(கடலூர் அருங்காட்சியகப் புதிய சேகரிப்பு)

காட்சிக் கூடங்கள் வடிவமைத்தலும் புதுப்பித்தலும்

சென்னை

இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் படிமக்கூடம், வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பொருட்கள் கூடம், வகைப்பாட்டுத் தாவரவியல் கூடம், புவியியல் கூடம் முதல் தளக்காட்சிப் பெட்டிகள், சிறுவர் அருங்காட்சியகக் காட்சிப் பெட்டிகள் சீரமைக்கும் பணிகள், தேசிய கலைக்கூடத்திலுள்ள தஞ்சாவூர் ஓவியங்கள் காட்சியமைப்பு, அருங்காட்சிய அமைப்பு வரைபடம் பொருத்துதல் போன்ற பணிகளை அந்தந்த பிரிவுகளுடன் இணைந்து வடிவமைப்பு மற்றும் காட்சியமைப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டன. கணிப்பொறிப் பிரிவு கணிப்பொறி வழி மூன்று நூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. (வடிவமைப்பு - காட்சியமைப்புப் பிரிவு).

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

புதிய படிமங்கள் காட்சியில் அமைக்கப்பட்டன. பறவைகள் காட்சிக் கூடத்தில் சில காட்சிப் பெட்டிகள் சீரமைக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டன.

சேலம்

கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் 109-வது பிறந்தநாளை ஒட்டி அவரது உருவப்படமும் அவர் தீட்டிய காந்தியடிகளின் ஓவியமும் மாவட்டக் கூடத்தில் காட்சியமைக்கப்பட்டன. காப்பறையில் ஆத்தூர் தேர்சிற்பங்கள் காட்சியிலமைக்கப்பட்டன.

மதுரை

விலங்கியல் காட்சிப் பெட்டிகளுக்கு கண்ணாடிகள் பொருத்தப்பட்டன. பழுதடைந்த பகுதியிலிருந்து காட்சிப் பெட்டிகள் பிரித்தெடுக்கப்பட்டு புதிய இடத்திற்கு மாற்றப்பட்டன.

கன்னியாகுமரி

காட்சியிலமைக்கப்பட்ட தேரின் மரச்சிற்பங்கள் சரி செய்யப்பட்டு திரும்பவும் சீராக தேரில் பொருத்தப்பட்டு காட்சிக் கூடத்தில் வடிவமைக்கப்பட்டன.

திருநெல்வேலி

19-12-96 அன்று 30 இசைக்கருவிகளுடன் கூடிய புதிய இசைக்கருவிகள் காட்சிக்கூடமும், கல்வெட்டுக்கூடமும் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு திறக்கப்பட்டன.

கண்காட்சிகள்

பல்வேறு கண்காட்சிகள் சென்னை அருங்காட்சியகத்திலும் மாவட்ட அருங்காட்சியகங்களிலும் நடத்தப்பட்டன.

சென்னையில்

தொல்பொருள் பிரிவு

தொழிற்கலைக் கூடம் புதுப்பிக்கப்பட்டபின் 31.12.96 முதல் பார்வையாளர்களுக்கு திறந்து வைக்கப்பட்டது.

வளர்கலைப்பிரிவு

வளர்கலையின் புதிய சேர்க்கைகள் - 31-12-96

கல்விப்பிரிவு

சிறுவர் ஓவிய கண்காட்சி - 31-12-96

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

10-12-96 முதல் 25-12-96 வரை சிறுவர் ஓவியக்கண்காட்சி

வேலூர்

வட ஆர்க்காடு மாவட்ட மரபுச் சின்னங்கள் - 22.11.96

ஈரோடு

அறிவியல் தொழில்நுட்பக் கண்காட்சி ஒத்துழை சோமசுந்தரம் நினைவு அரசு உயர்நிலைப்பள்ளியில், பெரியார் மாவட்ட வரலாற்று மன்றத்தின் ஒத்துழைப்புடன் 20-12-96 அன்று நடத்தப்பட்டது.

திருநெல்வேலி

புனித இருதய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அறிவியல் கண்காட்சி

கிருட்டிணகிரி

திரு. இரா. சுந்தரம், தனிநபர்க் கண்காட்சி, தொல் பொருட்களும் நாணயங்களும் 23-10-96 முதல் 7-11-96 வரை.

கண்காட்சிக்கு உதவிகள்

சென்னையில்

கீழ்க்கண்ட பள்ளிகளுக்கு அரும்பொருட்கள், மாதிரிகள், புகைப்படங்கள், கண்காட்சி நடத்த கடனாகக் கொடுக்கப்பட்டு திரும்பப் பெறப்பட்டன.

1. சாந்தோம் மேல்நிலைப்பள்ளி, சென்னை-4.
2. நமது மாதர் வேளாங்கண்ணி உயர்நிலைப்பள்ளி, வில்லிவாக்கம்.
3. தூய யோவான் பள்ளி, சென்னை.

கடலூர்

பாபா பட்ஸ் மற்றும் பிளாசம்ஸ் பள்ளிக் கண்காட்சிகளுக்கு கடலூர் அருங்காட்சியகப் பொருட்கள் கடனாகக் கொடுக்கப்பட்டு, திருப்பப் பெறப்பட்டன.

போட்டிகள்

சென்னை

சிறுவர் ஓவியப்போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன. (கல்விப்பிரிவு).

புதுக்கோட்டை

6.11.96 - குழந்தைகள் நாள் விழா ஓவியப்போட்டி

7.11.96 - குழந்தைகள் நாள் விழா இசைப்போட்டி

8.11.96 - குழந்தைகள் நாள்விழா பேச்சுப்போட்டி

சேலம்

24.10.96 - அருங்காட்சியகம் பற்றி பேச்சுப்போட்டி

25.10.96 அருங்காட்சியகம் பற்றி கட்டுரைப்போட்டி

கடலூர்

குழந்தைகள் நாள் தொடர்பாக பள்ளி மாணவ மாணவியருக்கு ஓவியப்போட்டி, 21.11.96

திருநெல்வேலி

30.12.96 கற்சிற்பங்களைப் பார்த்து பெயர் சொல்லும் போட்டி

பயணங்கள்,பயிற்சிகள்

ஆணையர் : திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.

25.12.96 வேலூர் அரசு அருங்காட்சியகத்தையும், வேலூர் கோட்டைக்குள் அருங்காட்சியகத்தைமாற்ற ஒரு கட்டடத்தையும் ஆய்வு செய்தார்.

துணை இயக்குநர் : முனைவர் ஜே. தேவசகாயம்

17.10.96 இந்திய கற்றுலாத்துறையால் புதுதில்லியில் அமைச்சகங்களுக்கிடையே நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து அருங்காட்சியக வளாகத்தில் புத்த மையம் அமைக்க நிதி உதவி கோரினார்.

22.12.96 சேலம் அருங்காட்சியகத்தில் நடைபெற்ற ஆறகழூர் மகுதைவாணர் ஆய்வரங்கில் தலைமை தாங்கி உரையாற்றினார்.

22.12.96 சேலம் அருங்காட்சியகத்தில் ஆறு மாவட்ட அருங்காட்சியகக் காப்பாட்சியர்களின் பணி தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

தொல்பொருள் பிரிவு

7.11.96 காப்பாட்சியர், திரு இரா. பாலகிருஷ்ணனின் காஞ்சிபுரம், முசிறி,புதூர் பயணம் மேற்கொண்டு ஆய்வுகள் மேற்கொண்டார்.

விலங்கியல் பிரிவு

11.12.96 காப்பாட்சியர், திரு. பா. ஜவஹர் நிஸ்டுக்கல் மன்னார் நாயக்கர் மாவட்டத்திற்கான அருங்காட்சியகத்தை பழனியில் அமைக்க புதிய கட்டடம் பார்வையிட்டார்.

வேதியியல் பாதுகாப்புப் பகுதி

21.11.96 முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர், ஸ்ரீவில்லிபுத்தூர் பயணம் மேற்கொண்டு அருள்மிகு அம்பாள் கோயில் சுவரோவியங்களை ஆய்வு செய்து வந்தார்.

புதுக்கோட்டை

30.10.96 - காப்பாட்சியர் திரு. ஜெ. இராஜாமுகமது பேரையூர், பெருமாநாடு ஆய்வுப்பயணம்

4.12.96 - சித்தன்னவாசலுக்கு ஆய்வுப்பயணம்

16.12.96 - வனநாட்டுக்கு ஆய்வுப் பயணம்

திருச்சி

20.11.96 - காப்பாட்சியர் திரு. ப. இராஜமோகன் பட்டுக்கோட்டையில் தங்க நாணயங்கள், படிமங்கள் ஆய்வு

25.11.96 - வேங்கூர் சென்று கற்சிற்பங்கள் ஆய்வு

27.11.96 - தஞ்சை மாவட்டம் திருவிடை மருதூரில் புதையல் பொருட்கள் ஆய்வு

18.12.96 - காட்டுருக்குச் சென்று கோத்தாரி சர்க்கரை ஆலை நிறுவனத்தாரின் உதவியுடன் 6 அடி லிங்கம் கொண்டுவரப்பட்டது.

26.12.96, 27.12.96 - அரியலூரிலுள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்பரேசன் சுரங்கங்களிலிருந்து தொல்லுயிர் கல்மரங்கள் கொண்டு வரப்பட்டன.

சுரோடு

25.10.96 - காப்பாட்சியர் திரு. அ. பெரியசாமி காங்கேயம் பாளையம் சென்று வாமணர் சிற்பம் ஆய்வு செய்தார்.

21.11.96 - கோபிச் செட்டிப்பாளையம் வைரவிழா மேல்நிலைப்பள்ளி பழைய கட்டடப்பகுதியில் கிடைத்த நாணயங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

15.12.96 - மத்திய மாநிலப் பள்ளிகள், முடிக்கும் துறை சென்று கல்வெட்டு ஆய்வு செய்யப்பட்டது.

22.12.96 - சேலத்தில் துணை இயக்குநரால் கூட்டப்பட்ட காப்பாட்சியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

உதகை

24.11.96, 5.12.96 - காப்பாட்சியர் முனைவர் சி. பசுபதிவரன் பொக்காபுரம், பகிர்முடி ஆகிய இடங்களில் ஆராய்ச்சி மேற்கொண்டார். கல்லட்டி பகுதியில் நடந்து குறிஞ்சி சேகரிக்கப்பட்டது.

12.12.96, 13.12.96- புது தில்லி கைவினை அருங்காட்சியகத்தின் தொகுப்பிலுள்ள பழங்குடியினர் முகமூடிகள் ஆராயப்பட்டன.

20.12.96- கள்ளபத்து தொல்லியல் குடியிருப்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கோவை

21.11.96-24.11.96 - காப்பாட்சியர் திரு. கு. கருணாநிதி நடுவச்சேரி, ஒத்தைக்கால்மண்டபம், கோவை இடிகரை, கோவை வெள்ளலூர் ஆகிய இடங்களில் உழவாரப் பணிகள் மேற்கொண்டார்.

22.12.96 - சேலத்தில் காப்பாட்சியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கன்னியாகுமரி

12.10.96 - காப்பாட்சியர் திரு. ந. சௌந்திரபாண்டியன் சுசீந்திரம் பயணம் மேற்கொண்டு சிற்பங்கள், கல்வெட்டுகள் ஆய்வு செய்தார்.

18.11.96 - நாகர்கோயிலுக்கு புதைபொருள் தொடர்பான ஆய்வுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

5.12.96 - தக்கலைக்கு புதைப்பொருள் தொடர்பான ஆய்வுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

22.12.96 - மாவட்ட ஆட்சியர் மற்றும் திருவாங்கூர் மன்னர் அரண்மனை ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன.

கிருட்டிணகிரி

27.11.96 - காப்பாட்சியர் திரு. ப. காசிலிங்கம் போச்சாம்பள்ளியில் புதைப்பொருட்களை ஆய்வு செய்தார்

6.12.96 - பட்டகப்பட்டி பெருங்கற்கால சின்னங்கள் நடுகற்கள் ஆய்வு செய்யப்பட்டன.

27.12.96 - தொரைப்பள்ளி பாறை ஓவியங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் - நடத்துதல், பங்குபெறுதல்

சென்னை

31.12.96 அன்று 'நவீன இந்திய ஓவியங்கள்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் ஓவியக்கலைஞர்கள், பேராசிரியர்கள், கலை விமர்சகர்கள் ஆகியோர் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளைப் படித்தனர் (கலைப்பிரிவு). 15.10.96, 19.11.96 மற்றும் 17.12.96 ஆகிய நாட்களில் சித்தமருத்துவக் கல்லூரியுடன் இணைந்து யோகாசனப்பயிற்சிகளும் சித்த மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டன (தாவரவியல் பிரிவு). டெல்லியில் 8.12.96 முதல் 13.12.97 வரை நடைபெற்ற 14வது அகில உலக அழியாச் சோதனை கருத்தரங்கில் வேதியியல் பாதுகாப்புப் பகுதி காப்பாட்சியர், முனைவர் வே. ஜெயராஜ் கலந்து "சென்னை அருங்காட்சியகத்தில் அரும்பொருட்களின் அழியாச் சோதனைகள்" என்ற தலைப்பில் கட்டுரை படித்தார்.

மாவட்டங்களில்

கடலூர்

காப்பாட்சியர் திருமதி ரு. தே. துளசி பிருந்தா நாலக வாரவிழா கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

உதகை

30.10.96- காப்பாட்சியர், முனைவர் சி. மகேசுவரன், உதகையில் கிராமிய அறிவியக்கம் நடத்திய பயிலரங்கில் "பழங்குடியினரது மூலிகை மருத்துவத்தை ஆவணப்படுத்துதல்" எனும் தலைப்பில் உரையாற்றினார்.

7.12.96 - 10.12.96 - பல்வேறு அதங்கார்சியகங்களின் குழுமம் பொது மாநாட்டில் கலந்து "அதங்கார்சியக சேகரிப்பு முறையான பதிவிற்கு முக்கியத்துவம் அளித்தல்" என்ற கட்டுரை படித்தார்.

25.12.96 இந்திய நாட்டுப் புறவியல் கழகக் கருத்தரங்கில் "கூத்தாண்டை திருவிழா - தமிழ் கிராமியப் பல்வகைக் கூடுகையின் ஒரு கூறு" என்ற கட்டுரை படித்தார்.

திங்கள் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள், வானொலி உரைகள்

சென்னை

மானிடவியல் பிரிவு

திரு. நா. வா. காசிநாதன், பேராசிரியர் ஆய்வுத் துறை இயக்குநர், "பல்லவ மல்லைத் தொழில்கள்", பேராசிரியர் டி. பாலகிருஷ்ணநாயர் நினைவுச் சொற்பொழிவு.

தொல்பொருள்பிரிவு

27.12.96 திரு. இரா. பாலசுப்பிரமணியன், காப்பாட்சியர், புதைப் பொருட்கள் சட்டம், சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்களுக்கு உரை.

வளர்கலைப்பிரிவு

திரு. ம. மோகன், காப்பாட்சியர் கலைப் பொருட்கள் சேகரிப்பு, அதங்கார்சியகப் பதிவுகள், கலைப் பொருட்கள் பராமரிப்பும் சேமிப்பும் என்ற தலைப்புகளில் சென்னைக் கிறித்தவக் கல்லூரி வரலாற்றுத்துறை மாணவர்களுக்கு உரை.

நாணயவியல் பிரிவு

திருமதி. இரா. சாந்தி, காப்பாட்சியர், புதைபொருள் சட்டத்தின் வழி அதம்பொருட்கள் சேகரிப்பு, அதம்பொருட்களின் அட்டைகள் தயாரித்தல், சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்களுக்கு உரை.

விலங்கியல் பிரிவு

திரு. பா. ஜவஹர், காப்பாட்சியர், அறிவியல் பொருட்களைச் சேகரித்தல் என்ற தலைப்பில் கிறித்தவக்கல்லூரி வரலாற்றுத் துறை மாணவர்களுக்கு உரை.

தாவரவியல் பிரிவு

(அ) டாக்டர் வி. அருணாச்சலம் "வள்ளியும் வள்ளியும்" -15.10.96

(ஆ)டாக்டர் கே. தியாகராசன் "தோல் நோயில் காளாஞ்சகப்பனை" - 18.12.96

(இ) டாக்டர் எஸ்.கே. காசி "மலைத் மருத்துவமும்" -12.12.96

(ச) ம.ந. புஷ்பா, காப்பாட்சியர், "சுற்றுப்புறமும் சுகாதாரமும்". "அறிவியல் காட்சிக்கூடங்களை பராமரித்தல்". சென்னை கிறித்தவக் கல்லூரி வரலாற்றுத் துறை மாணவர்களுக்கு உரை.

புவியியல் பிரிவு

திரு. தே. ஜவகர் பிரசாத்ராஜ், காப்பாட்சியர், "அருங்காட்சியகப் பதிவேடுகள்" சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்களுக்கு உரை.

வேதியியற்பாதுகாப்புப் பிரிவு

முனைவர் வே. ஜெயராஜ், காப்பாட்சியர்,

(அ) அருங்காட்சியகங்களில் வேதியியலின் பங்கு. எத்திராஜ் கல்லூரி வேதியியல் துறை மாணவிகள் மன்றத்தில் உரை - 1.12.96.

(ஆ) "அதம்பொதட்கள் பாதுகாப்பு" என்ற தலைப்பில் ஆறு உரைகள். சென்னை பல்கலைக் கழக தொல்லியல் துறை, 19.11.96, 25.11.96 மற்றும் 28.11.96.

(இ) சென்னை அருங்காட்சியகத்தில் உலோக அதம்பொதட்கள் பாதுகாப்பு. தேசிய கலைப்பொதட்கள் பாதுகாப்பு ஆராய்ச்சி ஆய்வகம், லக்நௌவ் பயிற்சியாளர்களுக்கு உரை.

(ச) கிறித்தவக்கல்லூரி மாணவர்களுக்கு அருங்காட்சியகக் காட்சிகள் பற்றிய உரை.

(உ) திருமதி ஏ.கே. கஸ்தூரிபாய், தேசிய கலைக் கூடத்தின் பாதுகாப்பு 1-11-96.

கல்விப் பிரிவு

திருமதி தே. அம்புலட்சுமி, காப்பாட்சியர், அருங்காட்சியகங்களைப் பற்றி செய்தல், சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்களுக்கு உரை.

வடிவமைப்புப் பிரிவு

நி.நு.ரா.ப. அதிகாரிகள், காப்பாட்சியர், காட்சி அமைப்பு முறைகள், முன்னாள் மற்றும் வரலாற்றுக் அருங்காட்சியகங்கள் சென்னை கிறித்துவக் கல்லூரி மாணவர்களுக்கு உரை.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

நி.நு. ஜெ. இராஜா முகமது, காப்பாட்சியர், புதுக்கோட்டை மாவட்ட வரலாற்றில் புதிய ஆய்வுகள் என்ற தலைப்பில் குத்தூஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் உரை, 20.12.96.

மதுரை

நி.நா.ப.சங்கரநாராயணன், காப்பாட்சியர் "அகழாய்வில் அறிவியல்" மதுரை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு - 23.12.96.

திருச்சி

அ. நி.நு.பா.இராஜேஸ்வரன், காப்பாட்சியர், "ஏன் இந்த அவல நிலை" திருச்சி வானொலி நிலைய ஒலிபரப்பு.

ஆ. நி.நு.சி.கோவிந்தராசன் "வரலாற்றில் கண்ணகிக் கோட்டம்" - 10.10.96.

இ. நி.நு. ஐநூற்றுவன், பெரும்பாதாகிருஷ்ணன், கல்வெட்டுக்களில் காணப்படும் பதினெண் விஷயங்கள் - 18.8.96.

ஈ. நி.நு. பாலகுப்ரமணியன், மருத்தில்லா மருத்துவமும், செலவில்லாச் சிகிச்சைகளும்.

வேலூர்

அ. முனைவர் திரு.செல்வதாஸ், ஊரில் கல்லூரி வரலாற்றுத் துறை விரிவுரையாளர், வடஆர்க்காடு மாவட்ட மரபுச் சின்னங்கள்.

ஆ. திரு.மு.காந்தி, காப்பாட்சியர், தென்தமிழ்நாட்டில் அருங்காட்சியகங்கள் - 24.12.96.

இ. மருத்துவர். ப. அர்ஜுனன், சித்தமருத்துவத்தின் சிறப்பு இயல்புகள் - 24.12.96.

சுரேடு

திரு. சோலார் சுப்ரமணி, "அரும்பொருட்கள் சேகரிப்பது எப்படி" - 28.10.96.

கடலூர்

அ. திரு. சுதர் குப்புசாமி, தமிழ் வளர்ச்சியின் அவசியம் - நவம்பர் 96.

ஆ. திருமதி ரு.தே. துளசி பிரந்தா, காப்பாட்சியர், அருங்காட்சியகமும் அறிவியலும், நகராட்சிப் பள்ளி, டிசம்பர் 96.

இ. "கடலூர் அருங்காட்சியகம்" - ஓர் உரைச்சித்திரம், பாண்டிச்சேரி அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

கன்னியாகுமரி

அ. திரு. ந. சௌந்தரபாண்டியன், காப்பாட்சியர், தேசிய ஒருமைப்பாடு

ஆ. சோழர்காலச் சிற்பங்கள், வரலாற்றுப் பண்பாடு மையம், நாகர்கோயில்.

திருநெல்வேலி

அ. திரு. ந. சுலைமான், காப்பாட்சியர், மதுரை, வி.எ.டு "ஓவியர்" விழாவினை தொடங்கி வைத்து உரை - 10.10.96.

ஆ. கல்லும் கதை சொல்லும், மதுரை வானொலி உரை - 15.10.96.

கிருட்டிணகிரி

அ. திரு. ப. காசிலிங்கம், "கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியம்" என்ற தலைப்பில் சொற்பொழிவு, 7.11.96.

ஆ. என்.ஆர். ஜெயச்சந்திரன், தாவல் தலைச் சேகரிப்பு, 28.12.96

பயிற்சி நிகழ்வுகள்

சென்னை

தாவரவியல் பிரிவு

1. சித்தமருத்துவ முகாமில் பேராசிரியர், மருத்துவர், இராஜேஸ்வரி, அவர்களின் "யோகப் பயிற்சி" 13.10.97, 18.11.97, 17.11.96.

2. சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்களுக்கு உயர் காட்சிகள் தயாரித்தல் பயிற்சி.

வேதியியல் பாதுகாப்புப் பிரிவு

1. சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்களுக்கு வேதியியல் பாதுகாப்புப் பயிற்சி - 10.10.96, 24.10.96, 28.10.96

2. எஸ்.பி.ஓ.ஏ. மேரிக்கல்லூரி வரலாற்றுத் துறை மாணவியர்களுக்கு வேதியியல் பாதுகாப்புப் பயிற்சி - 1.10.96, 17.10.96.

3. திரு. எம். சீனிவாஸ், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம், அருங்காட்சியகவியல் பயிற்சி - 16.10.96 முதல் 20.10.96.

வடிவமைப்பு மற்றும் காட்சியமைப்புப் பிரிவு

திரு. ஜே.ஏ. அசோகன், 'கணிப்பொறி ஓர் அறிமுகம்' பயிற்சியில் பங்கேற்பு - 9.12.96 முதல் 13.12.96 வரை.

மாவட்டங்களில்

வேலூர்

உலக எய்ட்ஸ் விழா - கல்லூரி மாணவ மாணவியருக்கு நினைவுச் சின்னங்களில் பயிற்சி - 28.16.96

திருநெல்வேலி

1. மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சுற்றுலாத் துறை மாணவர்களுக்கு பயிற்சி

2. மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்களுக்கு கல்வெட்டு மற்றும் தொல்லியல் தொடர்பான பயிற்சி

ஆராய்ச்சித் திட்டங்கள்

1. 'பழமங்களின் கைரேகை பதிவு செய்தல்' - மத்திய அரசின் நிதி உதவியுடன் இந்திரா காந்தி அணு ஆய்வு மையத்துடன் இணைந்த ஆராய்ச்சித் திட்டம் (வேதியியல் பாதுகாப்பு - தொல்பொருள் பிரிவுகள்)

2. ஓவியங்களின் பாதுகாப்பு - தென்மண்டலப் பண்பாட்டு மைய நிதி உதவியுடன் செயல்படும் திட்டம் (வேதியியல் பாதுகாப்புப் பிரிவு)

3. அமெரிக்க ஐக்கிய நாட்டு கெட்டி பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து பாதுகாப்பு ஆய்வு மேற்கொள்ள சென்னை தொழில் நுட்ப கழகத்துடன் இணைந்து திட்டங்கள் தயாரித்தல் (வேதியியல் பாதுகாப்புப் பிரிவு)

4. 'பல்வேறு அருங்காட்சியகங்களின் காட்சியமைப்பு' - நேரு அறக்கட்டளை நிதி உதவியுடன் ஆராய்ச்சித் திட்டம், திரு. ஜா.ரா. அசோகன் (வடிவமைப்புப் பிரிவு காப்பாட்சியர்)

5. 'முகமூடி யணியும் மரபு' நேரு அறக்கட்டளை நிதி உதவியுடன் ஆராய்ச்சித் திட்டம், முனைவர். சி. மகேசுவரன் (உதவி அருங்காட்சியகக் காப்பாட்சியர்)

6. நாயக்கர் கால ஓவியங்கள், பி.எச்.டி. ஆய்வு, திரு. ந. சுவாமிநாதன் (திருநெல்வேலி அருங்காட்சியகக் காப்பாட்சியர்)

7. கடற்கரைப் பகுதி முஸ்லீம்களின் கடல் சார்புச் செயல்பாடுகள், பொருளாதாரம் சமூக பழக்க வழக்கங்கள், பி.எச்.டி. ஆய்வு. திரு. ஜே. இராஜா முகமது, (புதுக்கோட்டை அருங்காட்சியகக் காப்பாட்சியர்).

ஆராய்ச்சிக்கு உதவிகள்

சென்னையில்

கீழ்க்கண்ட வர்களுக்கு ஆராய்ச்சிக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

தொல்பொருள் பிரிவு

திரு. என்.சி. ரஜிந்த், சென்னை - சோழர் கால படிமங்கள்

திருமதி கவிதா மணி, சென்னை-17 - பல்லவர், சோழர் கலைகள்

திரு. செந்தில், சென்னை - தொல்பொருளியல்

திரு. கோபால் சர்மா, போபால் - உள்ளீடற்ற படிமங்கள்

திரு. பி. ஜெயராஜ், சென்னை - நீல் சிலை

திரு. ஜாண்மேயோ, இலண்டன் - மரச்சிற்பங்கள்

திரு. மைக்கேல் பிரைர், பிரான்சு - படிமங்கள்

யூபெஸ்டி யூஜர்டின், பிரான்சு - படிமங்கள்

முனைவர் எ. ஏகாம்பரநாதன், சென்னை - தீர்த்தங்கரர் படிமம்

திரு. மோகனதாஸ், காப்பாட்சி நிலையவுக்கற்கள்

மானிடவியல் பிரிவு

1. திரு. கார்ட் பெரென்ட், ப்யா பியான்கோ, - அமெரிக்க ஐக்கிய நாடுகள், திரு. ஜேம்ஸ் ஹோவல், இலண்டன் ஆகியோர் - ரோமானிய அரும்பொருட்கள் திரு. ரொனால்டு பிஷப் ஸ்மித், ஆர்ஃப்ரே மானுவல் கார்டோசோ, போர்ச்சுகல் - பழைய பெரிய துப்பாக்கிகள்,

2. திரு. சத்தியநாதன், சிவகங்கை - இரும்புகாலப் பொருட்கள்

நாணயவியல் பிரிவு

1. திரு. ஜேம்ஸ் ஹோவல், இலண்டன் - ரோமானிய நாணயங்கள்

2. திரு. கெர்ட் பெரென்ட் மற்றும் ப்யா பியான்கோ, அமெரிக்க ஐக்கிய நாடுகள் - ரோமானியர் நாணயங்கள்.

விலங்கியல் பிரிவு

1. ஆந்திர பல்கலைக் கழக எம்.ஃபில். மாணவர்கள்

2. திரு. மணிமாறன், எம்.ஃபில் மாணவர், பிச்சிபூர்.

வேதியியப் பாதுகாப்புப் பகுதி

1. திரு. இரா. குணசேகரன், பி.சுகுமார், என். தட்சிணாமூர்த்தி, இந்திராகாந்தி அணு ஆய்வு நிறுவனம் - படிமங்கள் ஆய்வு.

2. திருமதி ஏ.கே. கஸ்தூரிபா, ஐ.ஐ.டி., சென்னை - தேசிய கலைக்கூடப் பாதுகாப்பு.

3. திரு. டி.ஜெயராஜ், சென்னை - படிமங்கள்.

கல்விப்பிரிவு

திரு. செந்தில், லேயோலா கல்லூரி, சென்னை, திரு. வெங்கடராமன், சென்னை, திரு. எம். சீராளன், தஞ்சாவூர் ஆகியோர் ஆய்வுக்கு உதவிகள் பெற்றனர்.

வடிவமைப்பு மற்றும் காட்சியமைப்புப் பிரிவு

திரு. எம். சீராளன், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம்.

டாக்டர். விஸ்வநாத் மெமோரியல் மருத்துவமனை அலுவலர்கள்.

மாவட்டங்களில்

புதுக்கோட்டை

மன்னர் கல்லூரி முதுகலை மாணவர்கள் இருவருக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

மதுரை

திரு. எம். பால்பாண்டி, முதுகலை ஆசிரியருக்கு, கல்வெட்டுகள் பற்றிய ஆய்வுக்கு உதவி.

கடலூர்

ஷீலா, திரு. ஜனார்த்தன், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கு புதைபொருள் பற்றிய தகவல்களளித்து உதவி.

திருநெல்வேலி

செல்வி உமாமகேசுவரி, பாண்டியர் காலச் சிற்பங்கள்

செல்வி வி. செலினா, திரு. சம்பத், வரலாற்றுத் துறை மாணவர்களுக்கு கோயில்கள் பற்றிய தகவல்கள் அளித்தல்.

கன்னியாகுமரி

திரு. தே. கோபாலன், முனைவர். ம. செந்தில் செல்வக்குமரன் ஆகியோருக்கு வரலாற்று மரபுகள் பாதுகாப்பு" என்ற ஆய்விற்கு உதவி வழங்கப்பட்டது.

வெளியீடுகள்

சென்னை

1. அருங்காட்சியகக் காலாண்டு செய்தி மலர் - (ஜூலை - செப்டம்பர், 1996) தொகுப்பாளர் முனைவர். நே. தேவசகாயம், மற்றும் முனைவர் வே. ஜெயராஜ்.

2. இந்து உருவங்கள், மறுபதிப்பு (1996) - தொல் பொருள் பிரிவு

3. மனித வெளிப்பாட்டுச் சுரப்பிகள் ஆதாரங்கள், பேராசிரியர். முனைவர் அசோக். கே. தேவன், கல்கத்தா பல்கலைக்கழகம்.

4. வளர்கலைக் கூடக் கையேடு - திரு. ம. மோகன், காப்பாட்சியர், வளர்கலைப் பிரிவு.

5. சித்த மருத்துவத்தின் சிறப்புகள் - தொகுப்பாசிரியர், திருமதி. ம.ந. புஷ்பா, காப்பாட்சியர், தாவரவியல் பிரிவு.

ஆய்வுக்கட்டுரைகள்,கைப்பிரதிகள்

சென்னை

முனைவர் நே. தேவசகாயம், தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள், தமிழ் நாட்டுப் பழங்குடிகள், தொகுப்பாசிரியர், தமிழ்நாடன், சேலம், 1996.

திரு ம. மோகன், வளர்கலையின் புதிய சேர்க்கைகள், கைப்பிரதி, டிசம்பர், 1996.

திருமதி. இரா. சாந்தி - இந்தோசாசானியர் நாணயங்கள், காயினெக்ஸ் 96, சென்னை, 1996.

முனைவர் வே. ஜெயராஜ்

1. சோளகப் பழங்குடிகள், தமிழ்நாட்டுப் பழங்குடிகள், தொகுப்பாசிரியர், தமிழ் நாடன், சேலம், 1996.

2. சென்னை அருங்காட்சியகத்தில் அரும்பொருட்களை அழியாச் சோதனை செய்தல், 14வது அகில உலக அழியாச் சோதனைகள் கருத்தரங்கு, புதுதில்லி, 8-13, டிசம்பர், 1996.

புதுக்கோட்டை

திரு. ஜெ. இராஜா முகமது, "அரிய செல்வங்களின் வைப்பகங்களை வளர்விதல்," இந்து, 14.10.96.

வேலூர்

திரு. ம. காந்தி, வாலாசாபேட்டை தீர்த்தங்கரர், முக்குடை, மலர் 23, இதழ் 5, நவம்பர், 1996.

கடலூர்

திருமதி சுதே துளசிபிருந்தா, அரசு அருங்காட்சியகம், கடலூர் - கைப்பிரதி.

உதகை

முனைவர் சி. மகேசுவரன், எம். குமாரவேலு, *"நீலகிரியில் குறிஞ்சி பூக்களின் மலர்ச்சி"*, தி டவுன்ஸ்டவுன் கிரானிக்கிள்ஸ்.

கன்னியாகுமரி

திரு. ந. சௌந்திரபாண்டியன், குடவரைக் கோயில்கள், மாலைமலர், நாகர்கோயில், டிசம்பர், 1997.

திருநெல்வேலி

திரு. ந. சுலைமான், தேர்ச்சிற்பங்கள், தினபூமி, தீபாவளி மலர், 96.

வல்லுநர் குழுக் கூட்டத்தில் பங்கு பெறுதல்

முனைவர் நே. தேவசகாயம்

"அரும்பொருட்களல்லாத பொருட்களின் ஏற்றுமதி" நிபுணர் குழுக் கூட்டத்தில் 25.10.96, 28.11.96, 27.12.96 ஆகிய நாட்களில் கலந்து கொண்டார்.

திருமதி. இரா. சாந்தி

சென்னை சுங்கத்துறை கைப்பற்றிய நாணயங்கள் மதிப்பு நிர்ணயக்குழு கூட்டத்தில் 29.11.96 அன்று கலந்து கொண்டார்.

அலுவலர் மாற்றங்கள்

1.10.96 - திரு. ந. சுலைமான் மாறுதலில் திருநெல்வேலி அருங்காட்சியகக் காப்பாட்சியராகப் பொறுப்பேற்றார்.

7.10.96 - திரு. ந. சௌந்திரபாண்டியன் கன்னியாகுமரி, அருங்காட்சியகக் காப்பாட்சியராகப் பொறுப்பேற்றார்.

11.10.96 - திரு. ப. இராஜமோகன், திருச்சிராப்பள்ளி அருங்காட்சியக் காப்பாட்சியர், மதுரை அருங்காட்சியகக் கூடுதல் பொறுப்பை, காப்பாட்சியர். திரு. பா. சாம் சத்தியராஜிடம் ஒப்படைத்தார்.

கல்விப் பணிகள்

சிறுவர் அருங்காட்சியக அடித்தளத்தில் திங்கள் முதல் வியாழக்கிழமை வரை முற்பகல் 12 - 1, மாலை 3 - 4 ஆகிய நேரங்களில் அருங்காட்சியகம், கல்வி தொடர்பானப் படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

குழுக்களாக வரும் பள்ளி மற்றும் சுற்றுலா பயணியர்க்கு பல்வேறு காட்சிக் கூடங்களில் விளக்கிக் கூறும் பணிகள் செய்யப்பட்டன.

பார்வையாளர்கள் வருகை

சென்னை

சென்னை அருங்காட்சியகத்திற்கு 90,788 பேர் வருகை புரிந்தனர்.

111 பள்ளிகளிலிருந்து 13,658 மாணவ மாணவியர் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டனர்.

கண். தீனதயாளன் இ.ஆ.ப.,

அருங்காட்சியகங்களின் ஆணையர்.

தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறை
அரசு அருங்காட்சியகம், பாந்தியன் சாலை,
எழும்பூர், சென்னை-600008.

தொலைபேசி எண் : 8269638 (பொது)
8261578 (ஆணையர்)

பணி நேரம் : காலை 9-30 முதல் மாலை 5-00 மணி வரை

சென்னை, கன்னியாகுமரி அருங்காட்சியக நுழைவுக் கட்டணம் : பெரியவர் ரூ. 3-00, சிறியவர் ரூ. 2-00, மாணவர்குழு நபர் ஒன்றிற்கு ரூ. 1-00.

மாவட்ட அருங்காட்சியகங்களின் அமைவிடங்கள் : புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சி, வேலூர், ஈரோடு, உதகை, கோவை, கடலூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருட்டிணகிரி.

சென்னை அருங்காட்சியகம் பிரதி வெள்ளி மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

மாவட்ட அருங்காட்சியகங்கள் பிரதி வெள்ளிக்கிழமை, இரண்டாவது சனிக்கிழமை மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

தொகுப்பு
டாக்டர் நே. தேவசகாயம்
துணை இயக்குநர்.

டாக்டர் வே. ஜெயராஜ்
காப்பாட்சியர்.